| **அனுப்புநர்** | **பெறுநர்** |
| --- | --- |
| தண்.வசுந்தராதேவி,<br>எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,<br>இணை இயக்குநர் புதுச்சேரி மற்றும்<br>அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள்<br>உதவி இயக்குநர்கள். |

**ந.க.எண்.041612/எச்.1/2018** **நாள் : 03.05.2019**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மேல்நிலை இரண்டாமாண்டு சிறப்புத் துணை தேர்வு ஜூன் 2019 தேர்வர்கள் பள்ளிகள் / தேர்வு மையங்கள் மூலம் ஆன்–லைனில் விண்ணப்பித்தல் – அறிவுரை வழங்க கோருதல் – தொடர்பாக.

*****

நடைபெற்று முடிந்த மார்ச் 2019 பருவத்தில், **1. மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறாதவர்கள் / வருகை புரியாதவர்கள் மற்றும் 2. மார்ச் /ஜூன் 2018 பருவத்தேர்வுகளில் மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வெழுதி தேர்ச்சி பெறாத பாடங்களை (+1 arrear subjects) மார்ச் 2019 பருவத்தில் தேர்வெழுதி தேர்ச்சி பெறாதவர்கள் / தேர்விற்கு வருகை புரியாதவர்கள் ஆகியோர்,** ஜூன் 2019 மேல்நிலை இரண்டாமாண்டு சிறப்புத் துணைத்தேர்வுக்கு / முதலாமாண்டு சிறப்புத் துணைத் தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க விரும்பும் தேர்வர்கள் **03.05.2019 முதல் 08.05.2019 வரை** பயின்ற பள்ளிகள் / தேர்வு மையங்களில் ஆன்–லைனில் பதிவு செய்யுமாறு தேர்வர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்வர்களின் விண்ணப்பங்களை ஆன்–லைன் வாயிலாகக் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு பதிவேற்றம் செய்ய தங்களது ஆளுகைக்குட்பட்ட பள்ளிகள் / தேர்வு மையங்களை அறிவுறுத்துமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. 03.05.2019 காலை முதல் தேர்வர்கள் பயின்ற பள்ளிகள் / தேர்வு மையங்களுக்கு வருகைபுரிவார்கள். அவ்வாறு வருகைபுரிவோரிடம் அவர்கள் மார்ச் 2019 மேல்நிலை இரண்டாமாண்டு / முதலாமாண்டு பொதுத்தேர்வின் நுழைவுச் சீட்டு (Hall Ticket) மற்றும் மதிப்பெண் பட்டியலினை (Statement of Marks) ஆய்வு செய்து **www.dge.tn.gov.in** என்ற website-ல் பள்ளிகள் / தேர்வு மையங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட User ID மற்றும் Password-ஐ பயன்படுத்தி, தேர்வர்களின் விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

2...

2. பள்ளிகள் / தேர்வு மையங்கள் விண்ணப்பங்கள் பெற்றிட 08.05.2019 அன்று கடைசி நாளாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுவரை பெறப்பட்டு பதிவு செய்த விண்ணப்பத்தொகையினை இணைப்பில் காணும் வழிமுறைகளைப் பின்பற்றி +1 / +2 தேர்வுகளுக்கு தனித்தனியே ஆன்–லைனில் செலுத்த வேண்டும். ஆன்–லைனில் விண்ணப்பத்தொகையினை செலுத்திய பிறகு அதற்கான இரசீதைப் பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும். அதனையும், Summary Report நகலையும் (+1 / +2 தேர்வுக்கு தனித்தனியாக) சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநரிடம் **10.05.2019** அன்று ஒப்படைக்க வேண்டும்.

விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவேற்றம் செய்தல் மற்றும் விண்ணப்பத் தொகையினை ஆன்–லைனில் செலுத்துதல் தொடர்பாக ஏதேனும் ஐயங்கள் எழுமாயின் **8012594127** என்ற கைபேசி எண்ணை தொடர்பு கொள்ள அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எனவே, ஜூன் 2019, மேல்நிலை சிறப்பு துணைத் தேர்வுகளுக்கு 03.05.2019 முதல் 08.05.2019 வரை தங்களது ஆளுகைக்குட்பட்ட பள்ளிகள் அனைத்தும், தேர்வர்களின் விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவுசெய்திட பள்ளித் தலைமையாசிரியர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்திடவும் முதன்மைக் கல்வி அலுவலர்கள் தக்க அறிவுரைகளை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பள்ளிகள் ஏதேனும் இப்பணியினை மேற்கொள்ளவில்லை எனப் புகார் பெறப்பட்டால் சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர் / ஆசிரியர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள உரிய முதன்மைக் கல்வி அலுவலர்கள்/மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு பரிந்துரைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் உரிய அறிவுரை வழங்கிடவும், மேற்படி பணியினை உரிய காலத்தில் முடித்திட உதவிடவும் அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு**
ஆன்–லைனில் விண்ணப்பத் தொகை செலுத்துவதற்கான வழிமுறைகள்

ஒம்/–

**இயக்குநர்**

**நகல்**

1. அனைத்து பள்ளிகள் / தேர்வு மைய தலைமையாசிரியர்கள் முதன்மைக் கல்வி அலுவலர்கள் வாயிலாக (தக்க நடவடிக்கைக்காக)
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தகவலுக்காக)

# ஆன்–லைனில் மேல்நிலை இரண்டாமாண்டு / மேல்நிலை முதலாமாண்டு (+1 Arrear) துணைத் தேர்வு விண்ணப்பத்தொகை செலுத்துவதற்கான வழிமுறைகள்

**www.dge.tn.gov.in**

↓

**Services**

↓

**Online Payment**

↓

**Accept - Declaration**

↓

**Press - Proceed Button**

↓

**Payment Category - Select Higher Secondary First Year Fee Payment By Schools (For +1)**

**(or)**

**- Select Higher Secondary Second Year Fee Payment By Schools (For +2)**

↓

**Enter School Code & Select Exam Fees**

↓

**Click- Submit Button**

↓

**Fill all the particulars and then press submit button**

↓

**Pay the amount by selecting Internet Banking Option**